# மாலைதீவிலிருந்து சந்திரிகா, பிரபாவுக்கு கடிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அரசாங் துக்கு அனுப்பி வைத்த கடி தம் ஒன்றுக்கு ஜனாதிபதி சந் திரிகா மாலைதீவிலிருந்து பதி லளித்துள்ளார்.

தற்போது மாலைதீவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந் திரிகா இந்தப் பதிலை அங

(2-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண பொதுசன நூலகம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

..ர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 17 இதழ் 331
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 1-1-1995

'போப்' விஜயத்தின் போது

## யுத்த நிறுத்தம் கடைப்பிடியுங்கள்

(கொழும்பு)

பாப்பரசரின் இலங்கை விஜ யத்தையொட்டி யுத்த நிறுத் தம் ஒன்றுக்கு அரசும், புலி களும் இணங்கவேண்டுமென்று கொழும்பு ஆயர் மல்கம் ரஞ் சித் கேட்டுள்ளார் என

(6ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியை அரசு கைவிடக்கூடாது

(கொழும்பு)

''எந்தத் தடைகள் ஏற் படினும் வடக்கு-கிழக்கு யுத் தத்தை முடிவுக்குகொண்டு வருவதற்கான சமாதான முயற்சியைக் கைவிடக் கூடாது''

இவ்வாறு உள்ளூராட்சி லிகிதர்களின் 20-வது வரு

(6-ம் பக்கம் பார்க்க)

# இரண்டாம் கட்ட சமாதான பேச்சுக்களை நாளை ஆரம்பிக்க

# விருப்பம் தெரிவித்து அரசு கடிதம்

## ரத்வத்தை தலைவர் பிரபாவுக்கு அனுப்பினார் -

[யாழ்ப்பாணம்]

தலைப் புலிகளுக்கும் — அரசு தரப்பினருக்குமான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நாளை 2-ம் திகதி [திங்கட் கிழமை] யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பது பற்றி ஆராயுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத் வத்தை தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத் தில்கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 29-ம் திகதி வியா ழக்கிழமை இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. 2-ம் கட்டப் பேச்சுவார்த்தை யில் புனரமைப்பு, போர் நிறுத்தம், பாதை திறப்பு ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாம்.

அமைச்சர் அனுப்பிய கடி தத்தில் 2-ம் கட்டப் பேச்சு வார்த்தையில் அரசு தரப்பில் யார் யார் பங்குபற்றுவார் கள் என்று குறிப்பிடப்பட வில்லை என்றும். இந்தக் கடி தம் கடந்த வியாழக்கிழமை தேசிய தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழரின் அன்றாடப் பிரச் சினைகளான புனரமைப்பு, போர் நிறுத்தம், பாதை திறப்பு பற்றியே 2-ம் கட்டப் பேச்சுவார்த்தையில் இடம் பெறவேண்டுமென்பதை வலி

(6ம் பக்கம் பார்க்க)

### 6ம் திகதி அரசின் கொள்கைப் பிரகடனம்

(கொழும்பு)

பொதுசன ஐக்கியமுன்னணி அரசின் கொள்கைப் பிரகட னத்தை எதிர்வரும் 6ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா மேற் கொள்ளவுள்ளார்.

நாடாளுமன்ற புதிய கூட்

(6ம் பக்கம் பார்க்க)

புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வாசகர்கள், விளம் பரதாரர்கள், விற்பனை யாளர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனை வருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொள்கிறோம்.

— நிர்வாகி.

## சமாதானத்திற்கு ராணுவம் ஆதரவு 'ஜெரி' பேசிய ஒலிப்பதிவுநாடா புலிகளுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரி வித்து இராணுவக் களபதி ஜெரி. டி. சில்வா தமது உறுதி மொழி அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை யாழ்ப்பாணத்தி லுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்திற்கு அரசு அனுப்பி வைத்துள்ளது.

இந்தஒலிபப்பதிவுநாடாவை நம்பிக்கையான ஒருவர் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி

[2ம் பக்கம் பார்க்க]

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன்

## மூன்று தமிழரின் சடலங்கள் மீட்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள வயல் ஒன்றில் மூன்று தமிழர்களின் சடலங்கள் கண் டெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பூனுக்கண்டு என்ற இடத்திலுள்ள வயல் வெளியில் கடந்த புதனன்று இம்மூன்று சடலங்களும் கண் டெடுக்கப்பட்டுள்ளன. சட லங்களில் துப்பாக்கிச் சூட் டுக் காயங்கள் காணப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டது.

பொன்னுத்துரை ஞானரத் தினம் (வாகநேரி 20-வயது) அமரசிங்கன் கோபாலன் (20 வயது), சிவலிங்கம் கருணைராஜா (கிரான் 15-வயது) ஆகியோரின் சடலங்

[6ம் பக்கம் பார்க்க]

## வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது சூடு

– பொலிஸரர் கடும் தாக்குதல் –

(கொழும்பு)

. கொழும்பில் வேலை நிறுத்த த்தில் ஈடுபட்ட தொழிலாளர் கள் மீது பொலிசார் துப்பாக் கிச் சூடு நடத்தியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பல தொழிலாளர்கள் பொலிசா ரின் தாக்குதலுக்கு இலக்காகி யுள்ளனர் என பி. பி. ஸி.

(6ம் பக்கம் பார்க்க)

## உலக தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சையில் இன்று ஆரம்பம்

(சென்னை)

..மொழி, கலை மற்றும் பண் ..ட்டுக்கு உறைவிடமான ..ஞ்சாவூரில் உலகின் தொன் ..மையான மொழிகளில் இன் ..ம் உயிர்த்துடிப்புடன் விளங் ..க்கொண்டிருக்கும் தமிழுக்கு ..மேலும் சிறப்புச் சேர்க்கும் ..கையில் இன்று 8-வது உல கத் தமிழ் மாநாடு தொடங் குகிறது

உள்நாட்டு அறிஞர்களும், மற்றும் 45 பல்வேறு நாடு களிலிருந்து 500 க்கு மேற் பட்ட தமிழ் அறிஞர்களும் கலந்துகொள்ளும் இந்த ஐந்து நாள் மாநாட்டை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் கே. ஆர். நாராயணன் தொடக்கி வைக்கிறார்.

1966.ம் ஆண்டு கோலாலம் பூரில் நடைபெற்ற முதல் உல கத் தமிழ் மாநாட்டைப் பின் பற்றி சென்னையிலும் பல வெளிநாடுகளிலும் இதுவரை 7 தமிழ் மாநாடுகள் நடை

(6ம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியின் ஆடம்பர விழா

(சென்னை)

தஞ்சைநகரில் நடைபெறும் மாநாடு, தமிழ் ஆராய்ச்சி மாநாடு அல்ல, ஆளும் கட்சி யின் ஆடம்பர விழாவாகும் என இந்திரா காங்கிரஸ் உட் பட பல எதிர்க்கட்சிகள் குற் றம் சாட்டியுள்ளன.

அவை இந்த மாநாடுபற்றி மேலும் தெரிவிக்கையில்: முதலமைச்சர் செல்வி ஜெய

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### 1995 புத்தாண்டுப் பலாபலன்கள்

3-1-95 முதல் செவ்வாய் வக்கிரமும், எல்லா இராசிப் பலன்களும் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றன. நூலாசிரியர்:- சத்யா. பாடசாலை உபகரணங்களுக்கு: புத்தகசாலை சுரேகா, யாழ்ப்பாணம். (சி-1358)

### தவறிவிட்டது

காங்கேசன்துறை வீதியில் இருக்கும் சரஸ்வதி பவான் உணவகத்தின் முன்பாக பிளாஷ்ரிக் நார் பை ஒன்று முக்கிய ஆவணங்களுடன் கடந்த வியாழன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சரஸ்வதி பவான் உணவகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-1356)

### விற்பனைக்கு

வர்த்தகப் பெருமக்கள், அன்பளிப்புச் செய்ய விரும்புவோருக்கு மலிவு விலை பிலடயறி கிடைக்கும். விலை ரூபா 65/- ஆனந்தா அச்சகம், காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம். (சி- 1357)

### விற்பனைக்கு

நல்லின இஸ்ரேல் ப்ளு (Israel Blue) முந்திரிகைக் கன்று விற்பனைக்கு உண்டு. உடன் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை, இராஜவீதி கோப்பாய். (எ 4618)

### மணமகள் தேவை

கத்தோலிக்க, வயது 33, சவூதி அரேபியாவில் தொழில் புரியும் கணணி இயக்குநருக்கு (Computer Operator) அழகிய பண்புள்ள மணமகள் தேவை. 28 வயதான சகோதரியுடன் மாற்று சம்பந்தம் செய்வதற்கும் இடமுண்டு. யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சகல விபரங்களுடன் தொடர்பு: விளம்பர இலக்கம் சி 1359, ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 1359)

### மாலைதீவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருந்தபடியே உடனடியாக அனுப்பி வைத்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இந்தக் கடிதம் திரு. பிரபாகரனுக்கு உடனடியாக சமர்ப்பிக்கப் படவேண்டும் என ஜனாதிபதி செயலக அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டச் சமாதானப் பேச்சில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்னைகள் பற்றியே முதலில் பேசவேண்டும் எனக் கோரிக் கடந்த மாதம் 22-ம் திகதி தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் அரசுக்கு கடிதம் அனுப்பி வைத்ததும் தெரிந்ததே. -இ-சி

### சமாதானத்திற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளதாகவும் அந்த ஒலிப் பதிவு நாடா விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வாவின் ஒலிப்பதிவு நாடாவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: விடுதலைப் புலிகளுடன் இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக அரசு மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க இராணுவம் தயாராகவுள்ளது அரசின் சமாதான முயற்சிக்கு படையினர் எவ்விதத்திலும் இடையூறாக இராது. அனைத்து நடவடிக்கைக்கும் இராணுவம் ஒத்துழைப்பு வழங்கும

சமாதானப் பேச்சுக்களுக்கு தடையாக இராணுவம் இருப்பதாக கூறப்படுவதில் உண்மையில்லை. அரசின் சமாதான நடவடிக்கைக்கு இராணுவம் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தவேளை ஜெரி டி. சில்வாவின் இந்த உறுதிமொழி போன்று, திரு. அன்ரன் பாலசிங்கமும் விடுதலைப் புலிப் போராளிகளும் இந்த சமாதான முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் .-சி

---

தமிழீழ மக்கள் அனைவருக்கும்

**எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்**

1995 புதிய ஆண்டே எழுந்து வருக!!!

''ஆண்டாண்டு காலமாய் தமிழர்
அனுபவிக்கும் துயரமதை
பூண்டோடே அழித்து
புதுமைகள் படைக்க
புதிய ஆண்டே எழுந்து வருக''

**யாழ். வணிகர் கழகம்**

21, சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம். (ஏ-4535)

---

வாடிக்கையாளர், அன்பர்கள் அனைவருக்கும்

எமது

**புதுவருட வாழ்த்துக்கள்**

விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்

மூக்குக்கண்ணாடி வகைகளுக்கு நாடுங்கள்

**எரிக் கணேஷ்**

566, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம். (எ-4636)

---

பாலர் கல்விக்கு —

**பாரதி பாலர் கழகம்**

[சாவகச்சேரி இலங்கை வங்கி அருகாமையில்]

கற்கை நெறி ஆரம்பம்:
04-01-1995 புதன்கிழமை

அனுமதி பெற விரும்புவோர் தங்கள் பிள்ளைகளின் சுயவிபரங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்

இயக்குனர் சபை

01-0 -95 (எ 4637)

---

குடிசார் பொறியியல் நிர்மாண வேலைகள்/சேவைகள் மேற்கொள்வோர்

**1995ம் ஆண்டுக்கானபதிவு**

வட தமிழீழத்தில் குடிசார் பொறியியல் நிர்மாண வேலைகள் அலலது சேவைகள் மேற்கொள்வோரிடமிருந்து, பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் செவ்வாய்க்கிழமை 31 தை 1995 வரை எம்மால் ஏற்றுக கொள்ளப்படும்.

[அ] வேலைகள் மேற்கொள்ள விரும்புவோர் எமது வியாபாரப்பதிவு இலக்கம், தம்மோடு நிரந்தரமாக வேலைசெய்வோர் பட்டியல், மற்றும் தம்மால் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைப்பட்டியல், மற்றும் விண்ணப்பம் சம்பந்தமான தகவல்களுடன் விண்ணப்பிக்கவும்.

[ஆ] சேவைகள் வழங்கவுள்ளோர் தமது சேவைப் பதிவு இலக்கம், தம்மோடு நிரந்தரமாக வேலை செய்வோர் மற்றும் தேவைகள் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

[இ] பொருட்கள் வழங்கல் நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய பொருட்களை வழங்கவிரும்புவோர் பொருட்களின் தரத்தையும், தொகையையும் பட்டியல்படுத்தி விண்ணப்பிக்கவும்.

[ஈ] வாடகைக்கு இயந்திரங்கள், வாகனங்கள், உபகரணங்கள் வழங்கல் நிர்மாண வேலைகளுக்கு தம்மால் வாடகைக்கு வழங்கக்கூடிய மேற்படி பொருட்களையும், அவற்றின் வாடகை வீதத்தையும் இணைத்து விண்ணப்பிக்கவும்.

கடித உறையின் இடதுபக்க மூலையில் ''நிர்மாண வேலைகள்/சேவைகள் 1995'' எனக் குறிப்பிட்டு பதிவுக்கட்டணமாக ரூபா 500/ பெறுமதியான காசுக்கட்டளையை தமிழீழ நிர்வாகசேவை என்ற பெயருக்கு எழுதப்பட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும். பதிவின்பின் வருடக் கட்டணம் அறவிடப்படும்.

பொறுப்பாளர்
தமிழீழ நிர்வாக சேவை
தமிழீழம்

(எ4638)

---

வாடிக்கையாளர்கள், அனைவருக்கும்

எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

35 வருட வானொலி, ரி. வி. பழுது பார்ப்பதிலும், சீர்செய்வதிலும் நம்பிக்கையின் முன்னோடிகள் ! !

**வானொலி மனுவல்**

121, அருச்சுனு வீதி, [ஸ்ரான்லி வீதி] யாழ்ப்பாணம். (ஏ-4623)

---



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய

**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

கண்ணைக் கவரும் வர்ண நகைகளின் எழில்கோலம்
காலத்தால் அழியாத 22 கரட் தங்க நகைகளுக்கு
யாழ்ப்பாண மக்களின் நன்மதிப்புப் பெற்ற நாணயமான நகை வியாபாரிகள்
★ எமக்கு எங்கும் கிளைகள் இல்லை ★

**நதியா நகை மாடம்**

02, சந்தோஸம் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-4627)

# $3\frac{1}{2}$ லட்சம் பிள்ளைகள் இவ்வருடம் பாடசாலைகளில் சேர்க்கப்படுவர்

(கொழும்பு)

இந்த வருடம் பாடசாலைகளுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் பிள்ளைகள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இவர்களில் ஒரு தொகுதியினரை சில பாடசாலைகள் ஏற்கனவே அனுமதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் இடம் கிடைக்காது போனால் பெற்றோர், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும். தேசிய பாடசாலையாக இருந்தால் கல்வி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். ஏனைய பாடசாலைகளாக இருந்தால் பிராந்திய கல்வி அலுவலகங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

பிள்ளைகளை அனுமதிக்கும் போது பாடசாலை அதிபர்கள் நன்கொடை கேட்கக்கூடாது. வகுப்புக்குத் தேவையான தள பாடங்களைக் கேட்கக் கூடாதெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களைக் கல்வி அமைச்சு வழங்கும். ஏனைய பாடசாலைகள் மாகாணக் கல்வி அமைச்சிடமிருந்து தமக்குத் தேவையான தளபாடங்களைப் பெற்றுக்கொள்ளும். (இ)

## மதுபான விற்பனை நிலையத்தில் திருட்டு

(நெல்லியடி)

மதுபான விற்பனை நிலையத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த 10,500 ரூபா பெறுமதியான 43போத்தல் சாராயம் இரவு நேரம் திருடப்பட்டுள்ளது.

இத்துணிகரச் சம்பவம் அண்மையில் பருத்தித்துறை சிவன்கோயில் வீதியிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மதுபானச்சாலையில் நிகழ்ந்துள்ளது.

இத்திருட்டு சம்பந்தமாக மதுபான நிலைய விற்பனையாளர் வை.சுதந்திரபோஸ் பருத்தித்துறை தமிழீழக் காவல் துறையில் முறையிட்டுள்ளார். 1-60


நத்தார் – புதுவருட வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
★ மலிவு விற்பனை
தைப்பொங்கல் [15-01-1995] வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.
★ சகலவிதமான புடவைகளுக்கும் விசேட கழிவுண்டு.

லண்டன் புடவை நிலையம்
[தீவகம்]
249, இராசன் வீதி [மின்சாரநிலைய வீதி]
யாழ்ப்பாணம்.
(எ-4566)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள்
புதுவருட வாழ்த்துக்கள்

- இமிடேஷன் கோல்ட் கவரிங் நகைகள்
- மணப்பெண்களின் சோடனை நகைகள்
- வெளிநாட்டு அழகு சாதனப் பொருட்கள்
- சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்
- லேஸ், நூல் வகைகள்
- சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள்
- சிறுவர்களின் பாவனைப் பொருட்கள்
- பேபி சூட், சேட் வகைகள்
- மேசை விரிப்புகள்
- பூச்சாடிகள்

அத்தனையும் உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்து கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

ஜெயா அழகு மாடம்

மொத்த வியாபாரம்:
187, இராசன் வீதி,
[மின்சார நிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம்:
177, ஏ. இராசன் வீதி,
[மின்சார நிலைய வீதி],
யாழ்ப்பாணம்.

மங்கையரே: எம்மிடம் தலைநகை வாடகைக்கு உண்டு.
(எ-4629)



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

ஸ்ரீசத்தியா பொலிகிளினிக் அன்ட் பார்மசி
★ சகல விதமான நோய்களுக்கும் வைத்திய சிகிச்சை அளிக்கப்படும்.
★ சகல ரோகங்களுக்குமான தைல வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீசத்தியா பொலிகிளினிக் அன்ட் பார்மசி
சிறுவர் போஷாக்குப் பூங்கா முன்
பொம்மைவெளி
யாழ்ப்பாணம்
(எ-4616)



புத்தாண்டின் உதயம்
புதிய சங்கற்பத்தை உருவாக்கட்டும்.
தரமான உணவுப் பொருட்களுக்கு மட்டுமல்ல, தலைசிறந்த பத்திரிகை சஞ்சிகைகளை விநியோகிக்கும் நிறுவனம்.
18 மணி நேர வாசகர் சேவை எம்முடையது

சிவன் ஸ்ரோர்ஸ்
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
ஏ-4630



அனைவருக்கும் இதயம் பொங்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!
பாடசாலை அலுவலக உபகரணங்கள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

சோபிதா
363. காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(எ 4628)



விடிவை நோக்கும் அனைவருக்கும் மங்களம் பொங்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
விசேட சுபகாரியங்களுக்குத் தேவையான பனாரிஸ், காஞ்சிபுரம், மைசூர் சில்க், பெங்களூர் சில்க், பட்டு வேட்டிகள், சேட்டிங், சூட்டிங் அனைத்துப் புடவைத் தினுசுகளுக்கு யாழ்ப்பாண நகரில் பெயர் பெற்ற ஸ்தாபனம்

திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சாரநிலைய வீதி, (மேல் மாடி) யாழ்ப்பாணம். (எ 4626)



வாடிக்கையாளர்கள், அன்பர்கள். நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு
எமது நத்தார் - புது வருட நல்வாழ்த்துக்கள்.
செல்லையா சிவபாதலிங்கம்
★ வைரக்கல், நகை வியாபாரம் ★
★ சிறந்த வேலைப்பாடுகள் உள்ள தங்க, வைர நகைகளையும், சிங்கப்பூர் நகைகளையும் விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.
★ ஓடர் நகைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுப்பவர்கள்.

செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல், நகை வியாபாரம்.
191, H கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(எ 4617)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் சிறப்பு நூலகம்

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி

# பதவி வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகைமையுடைய வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து "பொது முகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி" என்ற விலாசத் திற்கு 20-1-1995ற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ, அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

## 1. வர்த்தக முகாமையாளர்: [106:8]

சம்பள அளவுத்திட்டம்: 1005 - 1705
40 x 5 - 50 x 10

(அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட படிகளும்)

1. கல்வித் தகைமை:

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங் களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. வர்த்தக/தொழில்துறைஸ்தாபனம்ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியும், அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் சந்தைப் படுத்தல் / வழங்கல் / பொருள் விநியோகம் பொருட்களின் இறக்குமதி / ஏற்றுமதியென்ற துறைகளில் வர்த்தக / தொழில்துறை ஸ்தா பனம் ஒன்றின் 4 வருடங்களுக்குக் குறை யாத அனுபவம்.

2. வயது: 23 — 40.

3. விசேட தகைமை: ஆங்கிலம் அல்லது சிங்களம் பேச, எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

## 2. கணக்குப் பதிவாளர்: [301.10]

சம்பள அளவுத்திட்டம்: 855 - 1385
30 x 7 - 40 x 8

(அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட படிகளும்)

கல்வித் தகைமை:

அ. கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் அல்லது கணக்குப் பதிவு பதவியில் 2 வருடங்களுக்குக் குறை யாத அனுபவம் அல்லது 12வது சம்பளத் திட்டத்தில கணக்கியல் துறையில் 4 வரு டத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவா ளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை யில் சித்தி.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தி.

2. வயது 20 — 40.

## 3. லொறி சுத்திகரிப்பாளர்: [314:14]

சம்பள அளவுத் திட்டம்: 700 - 950
15 x 10 - 20 x 5

(அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவால் அங்கீ கரிக்கப்பட்ட படிகளும்)

கல்வித் தகைமை:

அ. கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளஅள வுத் திட்டத்திலான பதவியில் 1 வருடத் திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. 5ம் வகுப்பு கல்வித் தராதரமும், சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத் தல் வேண்டும்.

2. வயது: 18 — 40.

## நிபந்தனைகள்:

அ. விண்ணப்பதாரர் 2 வருடத்திற்கு மேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத் தல் வேண்டும்.

ஆ. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


இ. சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப் பணம் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும். (ரொக்கம், ஆதனம்.

ஈ. தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்திற்குக் கடமை புரிவ தற்காக சம்பந்தப்பட்ட பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

உ. விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றி தழ், அனுபவச் சான்றிதழ், வதிவிட அத் தாட்சிப்பத்திரம், பிறப்புச் சான்றிதழ், அன்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ் கள் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட்டி ருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
சாவ. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

28-12-1994 (ஏ-4622)



## கனகராசாவுக்கு தேசாபிமானி விருது

(யாழ்ப்பாணம்)

மாற்றம் சஞ்சிகை நடாத் தும் தமிழ்த்தாய் மன்றத்தின் 'தேசாபிமானி - 94' விருது மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசாவிற்கு வழங்கப்படுகிறது.

பசுமையின் நண்பன் எனப் பாராட்டப்படும் இவர் நாட் டின் எதிர்காலத் தேவையை உணர்ந்து எண்ணற்ற மரங் களை நாட்டியும் பாதுகாத் தும் வந்துள்ளார். சுற்றுப் புறச் சூழலை சுத்தமாக வைத் திருக்கவும் சனசமூக நிலையங் களை அபிவிருத்தி செய்யவும் தன்னலான பங்களிப்பை செய் துள்ளதுடன் பொது இடங் களில் கிணறுகள் அமைத்தும் தண்ணீர் தாங்கிகள் வைத் தும் மக்களுக்கு அளப்பரிய தொண்டாற்றியுள்ளார்.

இவருக்கான விருது வழங் கல் வைபவம் நாளை திங்கள் பி. ப. 3-00 மணிக்கு பேரா சிரியர் செ சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெறும். இந்நிகழ்வில் சிறப் புரை, கௌரவ உரை, விருது வழங்கல், கௌரவிப்பு நிகழ்ச்சி, பதிலுரை என்பன வும் இடம் பெறும். (சி)

## திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் நாலா பக்கமும் அண்மைக் காலமாக கோழிகள், ஆடுகள், மாடுகள் ஆகியன திருட்டுப்போயுள் ளன. கடந்த வாரம் சுண் டுக்குளி, நாவற்குளி, அரி யாலை, மறவன்புலோ ஆகிய இடங்களில் கோழிகள், மாடு கள் திருட்டுப் போயுள்ளதா கத் தெரியவருகின்றது. -59




வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்

எமது புதுவருட வாழ்த்துக்கள்!

சின்னச் சின்ன ஆசைகளை வண்ண வண்ண உன்னத கலைநயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு கோலத்திற்கேற்ற அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றா தங்கப் பவுண் நகைகளாக செய்து பெற்றிட வாரீர்!!!

சிறி நதியா நகை மாளிகை

2, G ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-4634)

1995-ம் ஆண்டு சகல மக்களினதும் துன்பம் களைந்த ஆண்டாக இன்பம் பொங்கிட

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சேட்டிங், சூட்டிங், சாறிகள், பிளவுஸ் வகைகள்

மற்றும்

கோவில் தேவைகளுக்குரிய குடை, கொடி, ஆலவட்டம் வாகை மாலை என்பவற்றுக்கும் சிறந்த ஸ்தாபனம்

ஞானம் ஆடையகம்

54, சோமையா தெரு, யாழ்ப்பாணம்.

(ஏ-4625)

### மணிவாக்கு

சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அழுகிறவன் கோழை. அழ வேண்டிய நேரம் வந்தாலும் சிரித்துக் கொண்டே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்பவன் நெஞ்சுர மிக்க வீரன். — ரூசே.

## நமது நோக்கு

### மலரும் புதிய ஆண்டு

புதிய சிந்தனைகளையும் புத்துணர்வையும் தரும் என்ற நம்பிக்கையோடு மலரும் புதிய ஆண்டை வரவேற்கிறோம்.

1994 - தென்மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியன அடுத்தடுத்து வந்தன.

மக்களின் எழுச்சியும் ஆர்வமும் புதியவர்களை ஆட்சிக் கதிரைகளில் அமர்த்தியது.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து வாரங்கள் மாதங்களாக முன்பே அப்பீடத்தில் உள்ள முட்கள் குத்த ஆரம்பித்துவிட்டனவா?

ஆட்சிக்கு வந்தவர்களின் சமாதான ஆர்வம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டதா?

இக்கேள்விக் குறியைத் தந்துவிட்டு, 1994 மெல்ல நழுவிவிட்டது!

சென்ற ஆட்சிக் காலத்தின் அவலங்களையும் ஊழல்களையும் ஆராயத் தொடங்க அதனால் பாதிக்கப்பட்ட உள்நாட்டுவெளிநாட்டுச் சக்திகள் முட்களாக மாறிவிட்டன.

வேலைநிறுத்தங்கள், சர்வதேச அழுத்தங்கள், அன்னிய முதலீடு வருவதற்கு அச்சப்படல், இருக்கும் தொழிற்சாலைகளே மூடப்படும் நிலை தோன்றியமை, அதிகரிக்கும் இராணுவச் செலவு போன்ற பல பிரச்னைகளால் ஆட்சியை உலுப்பிவிட்டுச் சென்றிருக்கிறது 1994.

சர்வதேச அரங்கிலே - போரால் சீரழிந்த நாடுகள் அமைதித் தீர்வைக் கண்டு புது நம்பிக்கையோடு செயற்படத் தொடங்கியதை 1994ல் கண்டோம்.

அதேவேளை -இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும், ருஷ்யாவிலும் கிளர்ச்சிகளும், போர்களும் தோன்றியுள்ளன.

புதிய நோக்கோடு, மக்களின் நலன் காக்கும் கொள்கையோடு செயற்படாவிட்டால், கிளர்ச்சிகள் தொடர்ந்து மக்கள் வேதனை அதிகரிக்கும் என்ற எச்சரிக்கையோடு மலர்ந்துள்ளது - 1995.

ஆட்சியாளர்களின் நீதியான, செயல்திறன்மிக்க நடவடிக்கைகளால் அமைதி தோன்றும் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டை வரவேற்கிறோம்.

# தொகுதி தோறும் மாடி வீடுகள் அமைப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு தொகுதியிலும் மாடி வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இந்த மாடி வீடுகள் ஒவ்வொன்றும் 100 வீடுகளைக் கொண்டதாக இருக்கும்.

அரசாங்க ஊழியர்களுக்கும் மத்தியதர வகுப்பினருக்கும் வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த வீடுகள் மாதாந்தக் கூலி அடிப்படையில் மத்திய தர வகுப்பினருக்கு வழங்கப்படும்.

இவற்றை விலைக்கு வாங்க விரும்பும் அரசாங்க ஊழியர்களுக்கு கடன் வசதிகள், கடன் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்கப்படும்.

## பலதும் பத்தும்

### லீலாவதி

ஒரு மரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றன? எண்ணிப் பாக்காமலே கணக்கிட்டுக் கூறலாமா? லீலாவதியைத் தெரிந்தவர்கள் கணக்கிட்டுக் கூறிவிடுவார்களாம்!

யார் இந்த லீலாவதி? எங்கிருக்கிறார்? கி. பி. 1114ம் ஆண்டுப் பகுதியில், இந்தியக் கணிதமேதை பாஸ்கராச்சாரியார் எழுதி வெளியிட்ட நூலின் பெயர் தான் 'லீலாவதி''!

மர இலைகள் கணக்கிடுவதுபோன்ற பலநுட்பமான கணித வாய்ப்பாடுகளை உருவாக்கியவர் மாத்திரமல்ல, அவர் ஒரு வானவியலாளராகவும் விளங்கினார்.

மேலைநாடுகளில் மாத்திரம்தான் கணிதம், விஞ்ஞானம் தோன்றி வளர்ந்தது என்ற மாயை மறைய வேண்டும். கீழைத்தேயங்களையும் அவை வளர்ந்த வரலாறுகள் வெளிக்கொணர வேண்டியது அவசியமல்லவா?

—மயூரன்

### பிராந்திய நிர்வாகம் சீரமைக்கப்படும்

(கொழும்பு)

பிராந்திய நிர்வாகம் சீரமைக்கப்படும். அரசாங்கம் இதற்கான முடிவை எடுத்துள்ளது.

மாவட்டச் செயலாளர்கள் பிரதேசச் செயலாளர்களின் பொறுப்பில் வரும் அமைச்சுக்குத் திணைக்களங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பார்கள்.

அரசாங்கம் மாவட்டச் செயலாளர்கள் மூலமாகப் பிரதேசச் செயலாளர்களுக்கு நிதி உதவி வழங்கும்.

பிரதேசச் செயலர்கள் கிராம அதிகாரிகளின் நடவடிக்கைகளை அவதானிப்பார்கள். கிராம அதிகாரிகளை மாவட்டங்களுக்கிடையேஇடமாற்றம் செய்வதை மாவட்டச் செயலாளர்கள் மேற்பார்வை செய்வர். (இ)

# இராசி பலன்

01-01-1995

ஞாயிற்றுககிழமை

**(தமிழுக்கு மார்கழி 17)**

அமாவாசை மாலை 5-05 வரை; மூலம் பகல் 11-20 வரை, அமிர்தசித்தயோகம், இராகுகாலம் மாலை4-32முதல் 6-02 வரை, சுபவேளை, காலை 10-54 முதல் 11-04 வரை அமாவாசை விரதம்.

மேடம்: குறுகிய நோக்கம் தொழில் மத்திமம், குழப்பம்.

இடபம்: இனசன மதிப்பு, வருவாய்அதிகரிப்பு, பயணம்.

மிதுனம்: போட்டி நிலை, தொழில் பாராட்டு, முயற்சி பலிதம்.

கடகம்: தன்மானம் இழத்தல், பகைமை, அலைச்சல்.

சிங்கம்: எதிர்பாராத தொல்லை, மறதி, கண்டிப்பு.

கன்னி: தாயார் உதவி, சம்பாஷனை, காரியசித்தி.

துலாம்: துணிவின்மை. மனப்பயம், வேண்டாத செயல்.

விருச்சிகம்: உறவினர் மகிழ்ச்சி, கலகலப்பு, தெய்வீக வழிபாடு.

தனுசு: மனசஞ்சலம், குடும்ப பிரிவு, நினைத்து வருந்துதல்.

மகரம்; பிறர்க்கு உதவுதல், பணவரவு, ஞானசிந்தனை.

கும்பம்: பதவி மேன்மை, துணிச்சலான முடிவு, பாராட்டு.

மீனம்: வம்பளத்தல், காரிய தடை, பழைய பகைமை.

ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-01-01 ஞாயிறு இரவு

08-01 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய 'மேஜர் அசோகன்'
08-25 நேயர் கடிதங்கள்
08 30 செய்திகள்
08-40 கலந்துரை யாடுவோம் ''கவிதை பற்றி மனம் விட்டு''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1995-01-02 திங்கள் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-01-01 ஞாயிறு மாலை ஒலிபரப்பு

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்குச்சிலவினாடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 மாலை ஒலிபரப்பு யாவும் நிறைவு பெறம்

## கரங்குவித்தோம் மலர்ந்திடுக புத்தாண்டே

தினமுமெமை உருக்குலைக்கும் யுத்தத்தின் பேரலைகள்
இனியுதிக்கு மாண்டினிலே வலியிழந்து அழிந்தொழிய
கனிந்து வரும் சமாதானச் சூழ்நிலையும் தளிர்விரித்து
மனக்குமையல் நீக்கியெமை வாழவைக்க இறையருள்க.

உதயத்துப் பெருஞ்சுடரால் கரந்தொதுங்கும் பனித்திரைபோல்,
இதயத்தை ஊடுருவி உருக்குகின்ற கவலையொடு
வதைக்கின்ற வறுமைபிணி சீர்குலைக்கும் செயல்களெலாம்
உதிக்கின்ற ஆண்டே நீ, நீக்கிடவே மலர்ந்திடுக.

உரிமைக்குக் குரல் கொடுத்தோம்; உயிர்களொடு உடைமைகளை
எரியுமுண்ண விட்டுவைத்தோம்; எங்களுக்கோ ரமைதியினை,
பரபரக்கும் சூழ்நிலையில் மலருகின்ற புத்தாண்டே!
விரைந்தெங்கட் களித்திடவே கரங்குவித்தோம், மலர்ந்திடுக.

''மாரீசன் பிள்ளை''

### சரித்திரம் ஏந்தி வரணும்

அன்னியர் வரவால் இம்மண்
அழிந்ததும் போதும் மக்கள்
செந்நிறக் கடலில் மூழ்கி
இறந்ததும் போதும் மாலைப்
பொன்நிறக் கதிர் மறைந்து
பொதிந்திட்ட இருளும் போதும்
தன் அரசென்றே தமிழும்
நிமிர்ந்திட நீயும் வரணும்

யுத்தத்தால் எரியும் தீ எம்
யுக்தியால் தீய்ந்து போக
ரத்தத்தில் குளித்த மண்ணும்
ராகம் பூபாளம் பாட
முத்தென விளைந்து செந்நெல்
முன்னர் போல் வயலில் ஆட
சத்தியம் வென்ற நாளின்
சரித்திரம் ஏந்தி வரணும்

வருடங்கள் பத்து போரின்
வயதுமே கடந்தும் தமிழர்
தருமத்தின் யுத்தம் தொடரும்
தாய்தமிழ் விழிநீர் நீளும்
கருமங்கள் மறைந்தெம் மண்ணில்
களிப்புடன் மக்கள் வாழ
புதுமலர் மொட்டவிழ்ந்து
பூத்திடப் பிறந்து வரணும்

— நெடுந்தீவு லக்ஸ்மன்

### தொண்ணூற்றி ஐந்தாம் ஆண்டே வருக

வானமகள் தானீன்ற வண்ணப்பிள்ளை தினம்
வற்றாத தேனூற்று ! அமிர்தப் பொய்கை!
ஈனநிலை தகர்க்கின்ற இன்பத் தென்றல்! நீ
என்பேனே தொண்ணூற்றி ஐந்தே வாராய்!

பூமகளின் மீதிலொரு புதுமை பூக்கும் - விடி
பொழுதோடு நீவரவே அமைதி தோன்றும்!
மாமகளே தொண்ணூற்றி ஐந்தாம் ஆண்டே - இம்
மாநிலத்தோர் வரவேற்க மகிழ்ந்து வாராய்!

''வளலாய் ரஞ்சன்''

### நல்லாண்டே வந்திடுவாய்!

புத்தாண்டே வந்திடுவாய்
புதுமைகளைத் தந்திடுவாய்
புத்துயிரைப் பெற்றிடவே
புனர்வாழ்வை அளித்திடுவாய்!

வெற்றியைப் பெற்றிடவும்
வேதனையை அழித்திடவும்,
வீறுடனே வந்திடுவாய்
வெற்றியையும் தந்திடுவாய் !!

நல்லோர்கள் வாழ்ந்திடவும்
நலிந்தோர்கள் வென்றிடவும்
நலமதனைத் தந்திடவே,
நல்லாண்டே வந்திடுவாய்!!!

— வண்ணை சே. சிவராஜா

1995ம் ஆண்டு சகல மக்களினதும் துன்பம் களைந்த ஆண்டாக இன்பம் பொங்கிட

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆறுமுகம் சிற்பாலயம்

காளிகோவிலடி, திருநெல்வேலி.

(எ 4624)

### தாக்குதல் தொடங்கி 5 நிமிடத்தில்

# முகாமினுள் புகுந்த புலிகள் அதனை தீயிட்டு கொழுத்தினர்

– தப்பிய சிப்பாய் தகவல் –

(கொழும்பு)

முகாமை ஐந்து நிமிட நேரத்தில் முற்றாக தாக்கி யளித்த புலிகள் அதனை தீவைத்து கொளுத்தி நாசமாக்கினர்-

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டம் தாம்பராவெளி பூமாஞ்சோலை இராணுவ முகாம் தகர்ப்பின்போது படுகாயமடைந்து பொலநறுவை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் இராணுவ சிப்பாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்தச் சிப்பாய் மேலும் கூறுகையில்; நள்ளிரவு சுமார் 12-00 மணியளவில் முகாமை நோக்கிய பலபகுதிகளிலும் பலத்த மோட்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து சுமார் 5 நிமிட நேரத்தில் முகாமை சுற்றி நாலாபுறத்திலுமிருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட புலிகள் கண்டபடி சுட்டுக்கொண்டு முகாமினுள் நுழைந்தனர். முகாமை முற்றுகையிட்ட புலிகள் உடனடியாகவே அதனை தீயிட்டு கொளுத்தினர். இதனால் முகாம் எரிந்து நாசமாகியது.

இவ்வேளை ஒன்றும்செய்ய முடியாத நிலையில் முகாமை கைவிட்டு நாம் எல்லோரும் தப்பி ஓடிவிட்டோம். எனக்கு காலில் படுகாயம் ஏற்பட்டது எனவும் கூறியுள்ளார். -சி

# இரு புலிகள் நீரில் மூழ்கி வீரச்சாவு

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிப் போராளிகள் இருவர் நீரில் மூழ்கி வீரச்சாவடைந்துள்ளனர். கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீரவேங்கை குணநேசன் (சீனித்தம்பி கமலேஸ்வரன் மட்டக்களப்பு], வீரவேங்கை அரவாசன் (கனகசுந்தரன் விஜயகுமார் - அம்பாறை) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். கே சி

### மட்டு. மாவட்டத்தில்

# தமிழரின் 84,000 வீடுகள் படை நடவடிக்கையால் சேதம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையான காலப் பகுதியில் 84 ஆயிரத்து 332 தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்துள்ளன.

இவற்றில் 1990ம் ஆண்டுக்கு பிந்திய காலப்பகுதியில் மட்டும் மிக அதிக தொகையாக 51 ஆயிரத்து 613 வீடுகள் சேதமடைந்துள்ளன. மொத்தமாக சேதமடைந்த வீடுகளில் இதுவரை 9 ஆயிரத்து 398 வீடுகளே அரசாங்கத்தினால். திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதுதவிர பல ஆயிரக்கணக்கான வீடுகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளமையினால் அதன் உரிமையாளர்கள் அகதி முகாம்களிலும் உறவினர் இல்லங்களிலும் வசித்து வருகின்றனர், இதேவேளை இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில்இடம்பெயர்ந்த அனைவரும் மீளக் குடியமர்த்தப்படுவர் என அரசு அறிவித்திருந்தது. ஆனால் அரைவாசிக்கும் அதிகமானோர் தற்போதும் முகாம்களிலேயே வசித்து வருகின்றனர். அண்மையில் பெய்த கடும் மழை வெள்ளத்தினால் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களே கண்டெடுக்கப்பட்டன.

இவர்கள் வயல் தரைகளில் மாடுகள் மேய்த்துச் செல்கையில் இச்சம்பவம் இடம்பெற்றது. இப்பகுதியில் இராணுவத்தினர் கடந்த வாரம் ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. -கே.சி

### யாழ்.

## ஆஸ்பத்திரிக்கு வழங்கிய பாணினுள் 'அட்டை'

(மானிப்பாய்)

யாழ். போதனா வைத்திய சாலைப் பெண் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பாணில் 'அட்டை'யொன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை மேற்படி ஊழியருக்கு காலை உணவாக வழங்கப்பட்ட பாணிலேயே அட்டை சுருண்டவண்ணம் இறந்தபடியே இருந்தது.

இது சம்பந்தமாக வைத்திய சாலைப் பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்யப்படுள்ளது. [71-சி]

# வீரப்பனின் சகோதரன் அருச்சுனன் கைது

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் சகோதரன் அருச்சுனனும் மற்றொரு கூட்டாளி ஐயாத்துரையும் நேற்று தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெரியார் மாவட்டத்திலும் இதர இடங்களிலும் அவர்கள் புரிந்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்கென இந்தச் சட்டத்தின்கீழ் அவர்கள்மீது பல வழக்குகள் பதியப்பட்டிருப்பதாக பொலிசார் கூறினர்.

ஏற்கனவே வீரப்பனின் கூட்டாளிகள் ஐவர் பொலிசாரால் கைதாகி காவலில் இருப்பதும் தெரிந்தே. கடந்த சில வாரங்களுக்குமுன் வீரப்பன் குழுவால் கடத்தப்பட்டு நேற்று முன்தினம் அதிரடிப் படையால் மீட்கப்பட்ட மூவர் தொடர்பாக தமிழக அரச அதிகாரிகளுடன் அருச்சுணன் பேச்சுக்களில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. கே-சி

சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாந்த மாநாட்டில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

கதிர்காமம் மகாவித்தியாலயத்தில் உள்ளூராட்சி லிகிதர் சங்கத் தலைவர் நிமல் புஞ்சி கேவா தலைமையில் இம்மகாநாடு அண்மையில் இடம்பெற்றது லிகிதர் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன:-

நிறைவேற்று ஜனாதிபதி முறையை உடனடியாக ஒழிக்கப்படவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அதனையொத்த சட்டங்கள் உடனடியாக ஒழிக்கப்படவேண்டும்.

வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு பூரண சுதந்திரம் வழங்க வேண்டும். -கே-கி

வேலை நிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சந்தேசிய' தெரிவித்தது.

கொரியா- லங்கா கம்பனியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் பற்றி 'சந்தேசிய' மேலும் கூறியதாவது.

மேற்படி கம்பனியில் பல கோரிக்கைகளை முன்வைத்து போராடிய தொழிலாளர்களில் 27பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து ஏனைய தொழிலார்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இதையடுத்து அவ்விடத்திற்கு பொலிசார் வரவழைக்கப்பட்டனர்.

தொழிற்சாலையை மூடிய பொலிஸார் மின்சாரத்தை நிறுத்திவிட்டு தொழிலாளரை கண்டபடி தாக்கத் தொடங்கினர். கண்ணீர் புகைக்குண்டும் ஏவப்பட்டது, இதனால் தொழிலாளர் பலத்த இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு தொல்லைக்குள்ளானார்கள்.

ஈற்றில் துப்பாக்கிச்சூடு நடாத்தப்பட்டபோது அதில் ஒருவர் படுகாயமடைந்தார். தற்போது அவர் ருகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ம-சி

போப் விஜயத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்தது.

பாப்பரசர் இலங்கை வருவதற்கு சில நாட்களுக்கு முன்பும் வருகையின் பின்பு சில நாட்களும் இரு தரப்பினரும் யுத்த நிறுத்தத்தைத் கடைப்பிடிக்கவேண்டும்.

மேலும் இக்காலப்பகுதியில் யாழ். கடல் நீரேரிப் பகுதியில் அரச படைகள் தாக்குதல் எதனையும் நடாத்தக்கூடாதென்றும் ஆயர் மல்கம் ரஞ்சித் கோரியுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான 2ம் கட்டப் பேச்சுக்கள் பெரும்பாலும் அடுத்த வாரம் இடம்பெறலாமென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. -ம-சி

# இந்தோனேஷியாவில் 14 இலங்கையர் காவலில்

(கொழும்பு)

இந்தோனேஷியாவிலுள்ள தென்ஜகர்த்தாவில் 14 இலங்கைப் பிரஜைகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்;

ஜகர்த்தாவிலுள்ள குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் இவர்களைத் தடுத்துவைத்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியாவில்உள்ள பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவர்கள்போல் இவர்கள் வந்ததாகவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபின் இந்த 14 இலங்கைப் பிரஜைகளும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும்இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இ-சி

உலகத் தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளன. தற்போது நடைபெறும் 8-வது உலக தமிழ் மாநாட்டில் தமிழ் இலக்கியச் சிறப்புப் பற்றியும் அவை மேலும் நவீனப்படுத்துவதற்குரிய பல்வேறு வரைமுறைகள் குறித்தும் ஆய்வுக் கட்டுரைகள், கருத்தரங்குகள் விவாத அரங்குகள் ஆகியவை இடம்பெறவுள்ளன.

இந்த மாநாட்டின் முதல் நாளான இன்று தமிழின் தொன்மைகளை விளக்கும் வகையில் 54 அலங்கார ஊர்திகள் அடங்கிய அணிவகுப்பு உட்பட 5 நாட்களும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர பொதுமக்களின் நிரந்தர வசதிக்கென மணிமண்டபம், தங்கும் இல்லங்கள் புதிய வீதிகள், பாலங்கள் ஆகியவை இந்த மாநாட்டையொட்டி அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டில் பொது மக்கள் கலந்துகொள்வதற்காக 2000 சிறப்பு பஸ்களும் சிறப்பு ரெயில்களும் விடப்பட்டுள்ளன.

மாநாட்டின் இறுதிநாளான 5ம் நாள் பிரதமர் நரசிம்மராவ் கலந்துகொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஆளும் கட்சியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லலிதாவுக்கு புகழ்பாடும் 'கட் அவுட்' விளம்பர படங்களே எங்கும் காணப்படுகிறன்றன. செல்வி ஜெயலலிதாவுக்கு சரிந்துவரும் செல்வாக்கை சீர் அமைப்பதற்காக மேற்கொள்ளும் விழாவே இதுவாகும் என்று தெரிவித்துள்ளார்.

மாநாடு குறித்து வழக்குகள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் சூழ்நிலையில் இதற்கு முன்பு எந்த உலகத் தமிழ் மாநாட்டிலும் காணப்படாத ஒரு பரபரப்பான சூழ்நிலையில் இந்த 8வது உலகத் தமிழ் மகாநாடு நடைபெறுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஈழத்தமிழ் அறிஞர்கள் உட்பட பல நாட்டு அறிஞர்கள் பலருக்கும் இம் மாநாடு கதவடைப்புச் செய்துள்ளது. பாதுகாப்பை காரணங்காட்டி இந்தக் கதவடைப்பென கூறப்பட்டுள்ள நிலையில் இம் மாநாட்டை பகிஷ்கரிக்குமாறு இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து பல அமைப்புகள் குரல் கொடுத்துள்ளன. கே-சி

# வெளிநாட்டு முதலீடுகள் திசைமாறும் அறிகுறி

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்று வரும் தொழிலாளர்களின் போராட்ட அலைகளால் வெளிநாட்டு முதலீடுகள் திசைமாறும் அறிகுறி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில் தொடர்ந்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. பல தொழிற்சாலைகள் தொடர்ந்தும் இயங்கமுடியாத நிலைச்கு தள்ளப்பட்டுள்ளன. சில வெளிநாட்டு தொழிற்சாலைகள் தமது நிறுவனங்களை நிரந்தரமாகவே மூடிவிட முடிவு செய்துள்ளன.

இந்நிலையில் அரசுபெரும் நெருக்கடி நிலையை எதிர் நோக்கியுள்ளது. இந்த வேலை நிறுத்தங்களுக்கெல்லாம் ஐ. தே. க. தான காரணம் எனக்கூறி வரும் அரசு வேலை நிறுத்தங்களை முடிவிற்குக் கொண்டு வரவோ, தொழிலாளர் போராட்ட அலையை தடுத்து நிறுத்தவோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என வெளிநாட்டுத் தொழிற்சாலை நிர்வாகங்கள் குற்றம் சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -சி

இரண்டாம் கட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுறுத்தி தேசிய தலைவர் அரசுக்கு கடந்த 22-ம் திகதி அனுப்பிய கடிதத்துக்கு அரசு தறபொழுது இணங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. -ம-சி

6-ம் திகதி

1ம் பக்கத் தொடர்ச்சி)

டத் தொடரை 6ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்து அரசின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவார்.

இனப்பிரச்னை தீர்வு, பொருளாதாரம், தேசிய விவகாரப் உட்பட நாட்டின் அனைத்து விவகாரமும் சம்பந்தப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிகாவின் கொள்கை விளக்கப் பிரகடனம் அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இனப் பிரச்னை தீர்வு குறித்த அரசின் நிலைப்பாடு இதில் தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாடு இன்று பெரும் வேலைநிறுத்தங்களை எதிர்நோக்குவதாலும் வெளிநாட்டு முதிலீட்டாளர்களுக்கு அரசு உறுதிமொழி எதனையும் அளிக்காததாலும் அரசின் பொருளாதாரக் கொள்கை பிரகடனம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது, -சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-